www.StudyGuideIndia.com

**7011**

Register Number

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

( உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன் )

## Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. நாடகத் தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை ?

2. செம்மொழியின் இலக்கணம் யாது ? அவ்விலக்கணம் தமிழ்மொழியின்பால் பொருந்தியிருப்பதனை நிறுவுக.

3. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு.வி.க. வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

4. கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?

5. பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.

[ Turn over

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

தேனினும் தித்திக்கும் சொல்லினாள் - என்னைத்
தேற்றி மகனெனப் புல்லினாள் !
வானில் உயர்ந்து பறந்தவன் - போல்
வந்த வருத்தம் மறந்தனன் !

தெய்வ தமிழ்மொழிப் பெண்ணவள் - இந்தத்
தேசப் பெருமைக்குக் கண்ணவள் !
வையம் முழுதையும் வாழ்த்துவாள் - பிறர்
வாழ்ந்திடத் தன்சுகம் தாழ்த்துவாள் !

பற்பல ஆயிரம் ஆண்டுகள் - இந்தப்
பாரில் இருந்தறம் பூண்டவள் !
அற்புதம் இன்னமும் கன்னியே - புது
அழகு தருந்தமிழ் அன்னையே

– நாமக்கல் கவிஞர்

*குறிப்பு :* **காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.**

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. A little knowledge is dangerous.

17. A Penny saved is a penny gained.

18. Walls have ears.

19. Too much of anything is good for nothing.

20. Sense of humour is a healthy way of life.

21. Rain water harvest is a must to improve ground water level.

www.StudyGuideIndia.com

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. $1 \times 4 = 4$

அ) ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?''

ஆ) ''வாய்மையே வெல்லும்''

இ) ''மின்னுவதெல்லாம் பொன்னல்ல''

*அல்லது*

*'வானவில்'* அல்லது *'கடற்காட்சி'* என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்கு குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

*குறிப்பு :* **காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா**

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்கு பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் உகந்த விடையை எழுதுக. $5 \times 2 = 10$

சித்தார்த்தர் எனப்படும் புத்தர் கி. மு. 5 ஆம் நூற்றாண்டில் புத்தமதத்தை நிர்மாணித்த பின்னர் கி. மு. 3 ஆம் நூற்றாண்டளவில் அந்த மதம் தமிழகம் வந்தது. தமிழகத்தில் சமணத்தைப் போல் பௌத்தம் பெருமளவு செல்வாக்குப் பெறவில்லை. ஆயினும் தமிழ் இலக்கியத்திற்கும் மொழிக்கும் பண்பாட்டிற்கும் வழிபாட்டு முறைகளுக்கும் பௌத்தம் பெருமளவு நன்கொடை அளித்து இருக்கிறது.

www.StudyGuideIndia.com

தமிழின் இன்றைய எழுத்து முறைக்குப் பிராகிருதம், பிராமி ஆகிய இரு மொழிகளின் வடிவங்களும் காரணம் என்ற கருத்து உண்டு. இவ்விரு மொழிகளையும் தமிழகத்தில் பரவ விட்டவர்கள் பௌத்தர்களே. தமிழில் பௌத்தர்களின் பாலி மொழிச் சொற்களும் கலந்துள்ளன.

பௌத்தர்கள் தமிழ் மொழியைக் கற்று, அந்த மொழியிலேயே தங்கள் கருத்துக்களை எளிமையாகப் பிரச்சாரம் செய்தனர். சங்க இலக்கியமான நற்றிணையில் உள்ள ஒரு செய்யுளை இயற்றியவர் இளம் போதியார். இவர் பௌத்தத் துறவியாவார். சங்க காலத்தை அடுத்த காலகட்டத்தில் தோன்றியதாகக் கருதப்படும் மணிமேகலையும் பெருங்காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசியும் பௌத்த நூல்களாகும். பிற்காலச் சோழர் காலத்தில் தோன்றிய வீர சோழியம் என்ற இலக்கண நூலைப் புத்தமித்திரனார் என்பவர் இயற்றினார். இதற்கு உரை எழுதிய பெருந்தேவனாரும் புத்த மதத்தினர் ஆவார்.

*வினாக்கள் :*

16. எந்தக் காலகட்டத்தில் புத்தமதம் தமிழகம் வந்தது ?

17. பௌத்தம் போல தமிழகத்தில் பரவியிருந்த மற்றொரு சமயம் எது ?

18. இன்றைய தமிழ் எழுத்து முறைக்கு காரணமான மொழிகள் என்று கூறப்படுபவை யாவை ?

19. பௌத்தர்களின் மொழி யாது ?

20. இளம்போதியாரின் பாடல் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது ?

21. வீரசோழியத்தின் ஆசிரியர் பெயர் யாது ?

22. மேற்கண்ட பத்திகளில் காணப்படும் பௌத்த சமய நூல்களைக் குறிப்பிடுக.

www.StudyGuideIndia.com

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக : 10 × 1 = 10

23. நல்லவைகளும் கெட்டவைகளும் பத்திரிக்கைகளில் வெளியிடப்படுகின்றன.

( தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. கேள்விகள் மாணவர் பயிலா பகுதியில் இருந்து வந்ததால் பதில் எழுத தெரியவில்லை.

( ஏற்ற இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. பித்தர் சொன்னவும் பேதையர்ச் சொன்னவும் பத்தர்ச் சொன்னவும் பன்னப் பெறுபவோ என்றார்க் கம்பர்.

( தேவையற்ற இடங்களில் உள்ள வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

26. 'மலை' - 'மழை' அல்லது 'துனி' - 'துணி'

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக )

27. 'டி.வி.யில சீரியல் பார்க்காவிட்டால் லைஃபே போர் அடித்து விடும்' என்கிறாள் பாட்டி.

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக )

28. நான் செய்த தவறுக்கு சகல ஜனங்களும் என்னை ஷமித்தருள வேண்டும்.

( வடமொழிக் கலப்பினை நீக்கி எழுதுக )

29. நெல் வயலில் கலை பரித்தபோது அறவு கடித்ததால் அலறினான்.

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக )

[ Turn over

www.StudyGuideIndia.com

30. மயில் கூவ, குயில் அகவ, கிளி பாடியது.

( மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக )

31. நஞ்சையும் புஞ்சையும் காஞ்சி போயின.

( கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக )

32. ஆன்மா என்னும் சொல் உயிரையும் ஆத்மா என்னும் சொல் உடம்பையும் குறிக்கும் உடல் உள்ளம் உயிர் என்னும் வரிசையில் ஆன்மாவும் ஆத்மாவும் உள்ளன

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக ).

www.StudyGuideIndia.com